©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 15] சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 18, 2012
சித்திரை 6, திருவள்ளுவர் ஆண்டு–2043

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை

**அறிவிக்கை-I**

*[அரசாணை (பல்வகை) எண் 204, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி [UD 4(2)]த் துறை, 30 டிசம்பர் 2011.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்ப்புற மற்றும் நாட்டுப்புற அமைப்பு திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 26 ஜூன் 1974 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–இல் 349 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் II(2)/RUL/3096–74 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை செய்யக் கருதியிருப்பதையும் இராஜபாளையம் உள்ளூர் திட்டப்பகுதியில், கூடுதல் பகுதிகளைச் சேர்க்கக் கருதிய அவருடைய நோக்கத்தையும் இதனால் அறிவிக்கிறார்.

2. இந்த வரைவுத்திருத்தம், ***தமிழ்நாடு அரசிதழில்*** *வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன காலஅளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக உள்ளூர் பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளரிடமிருந்து அல்லது யாதொரு உள்ளூர் அதிகார மன்றத்திடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை, தமிழ்நாடு அரசு உரியவாறு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை எழுத்து மூலமாக அரசுச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.*

*வரைவுத் திருத்தம்*

மேற்சொன்ன அறிவிக்கையிலுள்ள "அட்டவணைக்கு" பதிலாக, கீழ்க்கண்ட அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அவையாவன:—

***"அட்டவணை***

| *தொடர் எண்.* | *உள்ளூர் திட்டப் பகுதியின் பெயர்.* | *வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயரும்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | இராஜபாளையம். | **இராஜபாளையம் நகராட்சி** |
| | | 1. வடக்கு வெங்காநல்லூர் (பகுதி) |
| | | 23. சம்மந்தபுரம் (பகுதி) |
| | | 24. மேல்பாட்டம் கரிசல்குளம் |
| | | 25. கொத்தன் குளம் (பகுதி) |
| | | 22. கடம்பன்குளம் (பகுதி) |
| | | 21. புதுப்பாளையம் (பகுதி) |
| | | 33. மேல்ராஜகுலராமன் |
| | | 27. சம்சிகாபுரம் (பகுதி) |
| | | 20. அப்பனேரி |
| | | 19. தெற்கு வெங்கானல்லூர் |
| | | 28. இராமலிங்கபுரம் |
| | | 26. அரசியார்பட்டி |
| | | 29. சோழபுரம் |
| | | 11. கொத்தன் குளம் (ஆர்.எப்) |
| | | 4. இராஜபாளையம் |
| | | 12. செட்டிகுளம் (பகுதி) |
| | | 6. சப்பாணிபரம்பு (ஆர்.எப்)". |

**கே. பணீந்தரரெட்டி,**
*அரசுச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (பல்வகை) எண் 14, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி [UD 4(2)]த் துறை, 12 ஜனவரி 2012.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்ப்புற மற்றும் நாட்டுப்புற அமைப்பு திட்டமிடுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 27 மார்ச் 1974 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2—இல் 181 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் II(2)/RUL/1807/74 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தைச் செய்யக் கருதியிருப்பதையும் தருமபுரி உள்ளூர் திட்டப்பகுதியில் கூடுதல் பகுதிகளைச் சேர்க்கக் கருதிய அவருடைய நோக்கத்தையும் இதனால் அறிவிக்கிறார்.

2. இந்த வரைவுத்திருத்தம், ***தமிழ்நாடு அரசிதழில்*** *வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன காலஅளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் இது தொடர்பாக மறுப்புரை அல்லது கருத்துரை வரப்பெறுமாயின் அவற்றை தமிழ்நாடு அரசு உரியவாறு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அரசு செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.*

***வரைவுத் திருத்தம்***

மேற்சொன்ன அறிவிக்கையிலுள்ள "அட்டவணைக்கு" பதிலாக, கீழ்க்கண்ட அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அவையாவன:—

***"அட்டவணை***

| *தொடர் எண்.* | *உள்ளூர் திட்டப் பகுதியின் பெயர்.* | *உள்ளூர் திட்டப்பகுதியாக அமைக்கப்படும் பகுதி வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்கள்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **1.** | தருமபுரி | **தருமபுரி நகராட்சிப் பகுதி** |
| | | **தருமபுரி ஊராட்சி ஒன்றியம்** |
| | | **31.** கடகத்தூர் |
| | | **32.** நடுஹள்ளி |
| | | **39.** நல்லனஹள்ளி |
| | | **40.** கோணங்கி நாயகனஹள்ளி |
| | | **42.** வெள்ளாளப்பட்டி |
| | | **41.** குப்பூர் |
| | | **38.** ஹலே தருமபுரி |
| | | **33.** ஏ.செட்டிஹள்ளி |
| | | **30.** பாப்பிநாயகனஹள்ளி |
| | | **13.** அதகப்பாடி |
| | | **35.** விருபக்ஷிபுரம் |
| | | **34.** வெள்ளக்கவுண்டம்பாளையம் |
| | | **37.** செட்டிகரை |
| | | **49.** நாய்கனஹள்ளி |
| | | **50.** வெள்ளோளை |
| | | **36.** அன்னசாகரம் |
| | | **51.** உன்குரானஹள்ளி |
| | | **54.** நூலஹள்ளி |
| | | **52.** முக்குல நாயக்கனஹள்ளி |
| | | **நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம்** |
| | | **29.** தடங்கம் |
| | | **28.** ஜெட்டிஹள்ளி |
| | | **27.** அதியமான் கோட்டை |
| | | **14.** பாலஜங்கமானஹள்ளி |
| | | **22.** பாகாலாஹள்ளி |
| | | **26.** நல்லம்பள்ளி |
| | | **25.** லளிகம் |
| | | **53.** மாடமங்கலம் |
| | | **55.** மிட்டா தின்னஹள்ளி |
| | | **56.** மிட்டார்எத்திஹள்ளி''. |

**கே. பணீந்தரரெட்டி,**
*அரசுச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 15, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி [UD 4(2)]த் துறை, நாள்: 12 ஜனவரி 2012.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்ப்புற மற்றும் நாட்டுப்புற அமைப்பு திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 17 ஏப்ரல் 1974 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–இல் 221 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் II(2)/RUL/2157/74 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை செய்யக் கருதியிருப்பதையும் கோபிசெட்டிப்பாளையம் உள்ளூர் திட்டப்பகுதியில், கூடுதல் பகுதிகளைச் சேர்க்கக் கருதிய அவருடைய நோக்கத்தையும் இதனால் அறிவிக்கிறார்.

2. இந்த வரைவுத்திருத்தம், ***தமிழ்நாடு அரசிதழில்*** *வெளியிடப்படும், நாளிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன காலஅளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக உள்ளூர் பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளரிடமிருந்து அல்லது யாதொரு உள்ளூர் அதிகார மன்றத்திடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை, தமிழ்நாடு அரசு உரியவாறு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை, எழுத்துமூலமாக அரசு செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.*

***வரைவுத் திருத்தம்***

மேற்சொன்ன அறிவிக்கையிலுள்ள "அட்டவணைக்கு" பதிலாக, கீழ்க்கண்ட அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அவையாவன:–

***"அட்டவணை***

| *தொடர் எண்.* | *உள்ளூர் திட்டப் பகுதியின் பெயர்.* | *உள்ளூர் திட்டப்பகுதியாக அமையும் பகுதி வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயரும்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | கோபிசெட்டிப்பாளையம் | **கோபிசெட்டிப்பாளையம் நகராட்சி** |
| | | 36. மொடச்சூர் (பகுதி) |
| | | 37. வீரபாண்டி |
| | | 38. லக்கம்பட்டி (பகுதி) |
| | | 36. மொடச்சூர் (பகுதி) |
| | | 38. லக்கம்பட்டி (பகுதி) |
| | | 16. சவுண்டப்பூர் |
| | | 17. அம்மாபாளையம் |
| | | 18. மேவாணி |
| | | 21. கூகலூர் |
| | | 22. சந்திராபுரம் |
| | | 23. புலவகாளிபாளையம் |
| | | 24. நஞ்சைகோபிசெடிப்பாளையம் |
| | | 25. புதுக்கரை |
| | | 26. பழைய பாரியூர் |
| | | 27. அக்ரஹாரக்கரை |
| | | 28. நஞ்சை புளியம்பட்டி |
| | | 29. செய்யாம்பாளையம் |
| | | 30. பாரியூர்கிராமம் |
| | | 31. வேலம்பாளையம் |
| | | 32. குள்ளம்பாளையம் |
| | | 33. நாதிபாளையம் |
| | | 34. கடுக்கம்பாளையம் |

| *தொடர் எண்.* | *உள்ளூர் திட்டப் பகுதியின் பெயர்.* | *உள்ளூர் திட்டப்பகுதியாக அமையும் பகுதி வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயரும்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | கோபிசெட்டிப்பாளையம் | **கோபிசெட்டிப்பாளையம் நகராட்சி**—*தொடர்ச்சி.* |
| | | **35.** நாகதேவம் பாளையம் |
| | | **39.** கலிங்கம்". |

**கே. பணீந்தரரெட்டி,**
*அரசுச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை
## அறிவிக்கை

*[அரசாணை (2டி) எண் 43, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 9 நவம்பர் 2011.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியிலும், **5** ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், **10–09–2008** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்–II, பிரிவு–2–இல், **295** மற்றும் **296** ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறையின் II(2)தொ.வே.வா./405/2008 ஆம் எண் அறிவிக்கைக்கு பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

### *திருத்தங்கள்*

மேற்சொன்ன அறிவிக்கையின் விவர அட்டவணையில், **(1)** நெடும்பத்தி (i)–ல் ''தொகுதி IV'' என்ற தலைப்பின்கீழ் ''மற்றும் சிப்பம் செய்பவர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "சிப்பம் செய்பவர் மற்றும் ''தொழில் பழகுநர்'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(2) "விளக்கங்கள்" என்ற தலைப்பின்கீழ் இனங்கள் (6) மற்றும் (7) விட்டுவிடப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2டி) எண் 32, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1) துறை, நாள் 9 ஆகஸ்ட் 2011.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 2–10–2002 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்–II, பிரிவு–2–இல், 505–507 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.வே.வா/817/2002ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமழ்நாடு மாநிலத்தில் பாலிதீன் தயாரிப்பு, மிருதுவான ரப்பர் வகைகள் தயாரிப்பு செயல்முறைகள், 'பிளாஸ்டிக்' தயாரிப்பு ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு, வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய விதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறாக ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுகின்ற நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

***விவர அட்டவணை***

***பாலிதீன் தயாரிப்பு, மிருதுவான ரப்பர் வகைகள் செயல்முறைகள், பிளாஸ்டிக் தயாரிப்பு ஆகியவற்றில் வேலைவாய்ப்பு***

| *தொழிலாளர்களின் வகைகள்* | *திங்களொன்றுக்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள்* |
|---|---|
| *(1)* | *(2)* |
| **A. பாலிதீன் தயாரிப்பில் வேலைவாய்ப்பு:—** | |
| **1.** பயிற்சித்திறன் பெறாதவர்கள்:– | |
| (1) இயக்குபவர் | 2977.00 |
| (2) உதவியாளர் | 2820.00 |
| **II. ஓரளவு பயிற்சித்திறன் பெற்றவர்கள்:—** | |
| (1) இயக்குபவர் | |
| (2) சுழற்றுபவர் (winder) | |
| (3) நெசவாளர் | |
| (4) பாவு ஒட்டுபவர் (worker) | 3136.00 |
| **III. பயிற்சித்திறன் பெற்றவர்கள்:—** | |
| (1) இயக்குபவர் | |
| (2) உருவம் கொடுப்பவர் (Extruder Operator) | 3452.00 |
| (3) அச்சு இயக்குபவர் | |
| (4) இயந்திரம் இயக்குபவர் | |
| (5) ஜாபர் (Jobber) | |
| **IV சிறப்பு பயிற்சித் திறன் பெற்றவர்கள்** | |
| (1) மாற்றுப்பணி பொறுப்பாளர் | |
| (2) முதலாளர் | 4242.00 |
| (3) கண்காணிப்பாளர் | |

**V. பொதுவான வகையினர்கள்:—**

| | |
|---|---|
| (1) மேலாளர் | 5666.00 |
| (2) உதவி மேலாளர் | 4717.00 |
| (3) கணக்காளர் | 3926.00 |
| (4) பண்டகசாலைக் காப்பாளர் | 3768.00 |
| (5) முதுநிலை உதவியாளர் | 3768.00 |
| (6) கணக்கு உதவியாளர் | |
| (7) எழுத்தர் அல்லது அலுவலக உதவியாள் | 3610.00 |
| (8) தட்டச்சர் | 3690.00 |
| (9) சுருக்கெழுத்து—தட்டச்சர் | 3768.00 |
| (10) வரவேற்பாளர் | 3610.00 |
| (11) ஏவலாள் | |
| (12) விற்பனையாளர் | 2977.00 |
| (13) அலுவலகப் பணியாள் அடிப்படைப்பணியாள் | 2800.00 |
| (14) காவலாளி | |

**B மிருதுவான ரப்பர் வகைகள் தயாரிப்பு செயல்முறைகளில் வேலை வாய்ப்பு:—**

**I. பயிற்சித்திறன் பெறாதவர்கள்:—**

| | |
|---|---|
| (1) இயக்குபவர் | |
| (2) தொழிலாளர் நிலை—III | 3136.00 |
| (3) துடைப்பவர் | |
| (4) சிப்பமாக்குபவர் | 2820.00 |
| (5) உதவியாளர் | |

**II. ஓரளவு பயிற்சித் திறன் பெற்றவர்கள்:—**

| | |
|---|---|
| (1) இயக்குபவர் | 3293.00 |
| (2) கொதிகலன் இயக்குபவர் | |
| (3) பணியாளர் நிலை—II | |

**III. பயிற்சித் திறன் பெற்றவர்கள்:—**

| | |
|---|---|
| (1) இயக்குபவர் | 3,452.00 |
| (2) தொழிலாளர் நிலை—I | |

**IV. சிறந்த பயிற்சித் திறன் பெற்றவர்கள்:—**

| | |
|---|---|
| (1) இளநிலை செயல் அலுவலர் | 5,033.00 |
| (2) முதலாள் | |
| (3) கண்காணிப்பாளர் | 4,242.00 |
| (4) பிரிவுத் தலைவர் | |

**V. பொதுவான வகையினர்கள்:—**

| | |
|---|---|
| (1) மேலாளர் | 5666.00 |
| (2) உதவி மேலாளர் | 4717.00 |
| (3) கணக்காளர் | 3926.00 |
| (4) கிடங்குக் காப்பாளர் அல்லது பண்டகக் காப்பாளர் | 3768.00 |
| (5) முதுநிலை உதவியாளர் | |
| (6) கணக்கு உதவியாளர் | 3610.00 |
| (7) எழுத்தர் அல்லது அலுவலக உதவியாள் | |
| (8) வரவேற்பாளர் | |
| (9) தட்டச்சர் | 3690.00 |
| (10) சுருக்கெழுத்து—தட்டச்சர் | 3768.00 |
| (11) ஏவலாள் | |
| (12) விற்பனையாளர் | 2977.00 |
| (13) அலுவலகப் பணியாள் அல்லது அடிப்படைப் பணியாள் | 2820.00 |

**இ. பிளாஸ்டிக் தயாரிப்பில் வேலைவாய்ப்பு**

**1. பயிற்சித்திறன் பெறாதவர்கள்:—**

| | |
|---|---|
| (1) இயக்குபவர் | 2977.00 |
| (2) உதவியாள் | |
| (3) பணி முடிவாக்குபவர் | 2820.00 |
| (4) சிப்பம் செய்பவர் அல்லது அனுப்புகை உதவியாளர் | |

**II. ஓரளவு பயிற்சித் திறன் பெற்றவர்கள்:—**

| | |
|---|---|
| (1) இயக்குபவர் | |
| (2) பட்டறை இயக்குபவர் | |
| (3) இயந்திர உதவியாளர் | |
| (4) கடைசலாள் | |
| (5) அச்சிடுபவர் | 3136.00 |
| (6) பற்றவைப்பவர் | |
| (7) ஒருங்கிணைப்பவர் | |
| (8) வெட்டுபவர் | |
| (9) இயந்திரம் இயக்குபவர் | |
| (10) தையற்காரர் | |
| (11) ஆய்வுக்கூட உதவியாளர் | |

**III பயிற்சித்திறன் பெற்றவர்கள்:—**

| | |
|---|---|
| (1) இயக்குபவர் | |
| (2) அமைப்பவர்—இயக்குபவர் | |
| (3) வார்ப்படம் தயாரிப்பவர் | 3452.00 |
| (4) மின் சும்மியர் | |
| (5) அச்சு தயாரிப்பவர் | |

**IV. சிறப்புப்பயிற்சித் திறன் பெற்றவர்கள்:—**

| | |
|---|---|
| (1) முதலாள் | |
| (2) மேற்பார்வையாளர் | 4242.00 |

**V. பொதுவான வகையினர்கள்:—**

| | |
|---|---|
| (1) மேலாளர் | 5666.00 |
| (2) உதவி மேலாளர் | 4717.00 |
| (3) கணக்காளர் | 3926.00 |
| (4) கணினி நிரல் தயாரிப்பவர் | |
| (5) பண்டகக் காப்பாளர் அல்லது கிடங்குக் காப்பாளர் | 3610.00 |
| (6) முதுநிலை உதவியாளர் | |
| (7) கணக்கு உதவியாளர் | |
| (8) எழுத்தர் அல்லது அலுவலக உதவியாள் | 3768.00 |
| (9) வரவேற்பாளர் | |
| (10) தட்டச்சர் | 3690.00 |
| (11) சுருக்கெழுத்து—தட்டச்சர் | 3768.00 |
| (12) ஏவலாள் | |
| (13) விற்பனையாளர் | 2977.00 |
| (14) அலுவலகப் பணியாளர் அல்லது அடிப்படைப் பணியாள் | 2820.00 |
| (15) காவலாளி | |

***விளங்கங்கள்:—***

**(1) அகவிலைப்படி:** தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்க வேண்டும்.

(i) அகவிலைப்படியானது 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது, (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்). 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியானது ரூ. 5.90 (ஐந்து ரூபாய் தொண்ணூறு காசுகள் மட்டும்) கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(ii) அகவிலைப்படியானது முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும் போது, ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எந்தவித பாகுபாடும் காட்டக்கூடாது.

(3) ஒரு நாள் ஊதியத்தை கணக்கிடுவதற்கு, மாதாந்திர உதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டுவரும் ஊதியங்கள் இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும், அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**விஷ்வநாத் அ. ஷெகாவ்கர்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.